# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2010

# தமிழ்மொழி

## ஆண்டு 8

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. உலகின் முதன்மொழி

அ) இலத்தீன் ஆ) தமிழ் இ) சீனம் ஈ) ஆங்கிலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தமிழர் உலகமக்கள் அனைவரையும் இவ்வாறு கொண்டனர்

அ) தோழர் ஆ) பகைவர் இ) உறவினர் ஈ) வேலைக்காரர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தேம்பாவணி என்பது எச்சமய இலக்கியம்?

அ) இந்துசமயம் ஆ) இசுலாமியசமயம்
இ) புத்தசமயம் ஈ) கிறீத்தவசமயம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. புதிய தேர், கப்பல் போன்றவற்றை முதன்முதலாக ஓடவிடுவது

அ) வெள்ளோட்டம் ஆ) ஒத்திகை இ) முதலோட்டம் ஈ) வெளியோட்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. நிலாமகள் நீலச்சட்டை அணிந்திருந்தாள். இங்கே நீலம் என்பது

அ) பூ ஆ) எழுவாய் இ) அடைமொழி ஈ) அழகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. கதிர்காமநாயகம் என்பவனால் காட்டிக்கொடுக்கப்பட்ட மன்னன்

அ) சங்கிலியன் ஆ) பண்டாரவன்னியன்
இ) கயிலைவன்னியன் ஈ) குலசேகரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. காட்டுமல்லிகை பூத்த காலம்

அ) கார்காலம் ஆ) கோடைகாலம் இ) நல்லகாலம் ஈ) அறுவடைக்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. இலக்கணத்தில் அத்து அற்று என்பன

அ) சந்தி ஆ) இடைநிலை இ) சாரியை ஈ) வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. எழில் என்ற சொல் குறித்து நிற்கும் பொருள்?

அ) சோலை ஆ) துன்பம்
இ) அழகு ஈ) வீரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பிறரை இழித்து வசைபாடுவதில் வல்ல புலவர்

அ) சோமசுந்தரம் ஆ) காளமேகம்
இ) மோசிகீரன் ஈ) கனக சுப்புரத்தினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. நாம் தைப்பொங்கல் கொண்டாடுவது இவரைப் போற்றுவதற்காக

அ) இறைவனை ஆ) உழவனை இ) மாட்டை ஈ) கதிரவனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. ஆகுபெயருக்கு எடுத்துக்காட்டு

அ) சோறு ஆ) பொரியல் இ) தண்ணீர் ஈ) பிட்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. தமிழர் புத்தாண்டு நாள்

அ) சனவரி 01 ஆ) சித்திரை 01 இ) ஆடி 01 ஈ) தை 01

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. சரியான இறந்தகால இடைநிலைகள்

அ) த் ட் ற் இன் ன் ஆ) க் ட் ப் வ் இ) த் ட் இன் அன் ஈ) க் ட் ற் ப்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. மூத்தோரை மதிக்காது அடக்கமின்றிப் பேசுவதைக் குறிக்கும் மரபுத்தொடர்

அ) துள்ளிக் குதித்தல் ஆ) ஆட்டம் போடுதல்
இ) வாய்காட்டல் ஈ) புறங்கூறல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. தரப்பட்டுள்ள சொற்களில் பெயரெச்சத்திற்கு சரியான எடுத்துக்காட்டு

அ) வந்த ஆ) வரும் இ) வந்து ஈ) வர

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பூ + துகில் இவற்றைப் புணர்த்தினால்

அ) பூதுகில் ஆ) பூந்துகில் இ) பூத்துகில் ஈ) பூம்துகில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. தோன்றல் திரிதல் கெடுதல் புணர்ச்சிகளை இப்படிக் கூறுவர்.

அ) மாறுபடு புணர்ச்சி ஆ) மாறிய புணர்ச்சி
இ) இயல்புப் புணர்ச்சி ஈ) மாறாப் புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன், ஐயிரண்டு திசை என்றால்

அ) எட்டுத்திசை ஆ) பத்துத்திசை இ) ஏழுதிசை ஈ) பலதிசை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. உவமை அணிக்கு எடுத்துக்காட்டு

அ) நெஞ்சக்கல் ஆ) கற்பாறை இ) நெஞ்சும்கல்லும் ஈ) கல்நெஞ்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. நன்றாகக் கருத்தூன்றிப் படியுங்கள். இச்சொல்லியம்

அ) ஏவல் ஆ) கூற்று இ) வினா ஈ) வியங்கோள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. திணை, பால், எண், இடம், காலம் இவற்றை வெளிப்படையாகக் காட்டும் வினைச்சொல்

அ) குறிப்புவினை ஆ) தெரிநிலைவினை
இ) எச்சவினை ஈ) குறைவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. சொல் + தொடர் இவற்றைப் புணர்த்தினால்

அ) சொல்த் தொடர் ஆ) சொற்றொடர்

இ) சொன்தொடர் ஈ) சொற் + தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. **குறள்:-** பொய்யாமை அன்ன புகழில்லை ______________

எல்லா அறமும் தரும்

கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

அ) பொய்யாமை ஆ) எய்யாமை இ) நையாமை ஈ) வாய்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. வாழைக்குக் குட்டி போல் நெல்லுக்கு

அ) நாற்று ஆ) பயிர் இ) பிள்ளை ஈ) வடலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. சிங்கம் முழங்கும் அதுபோல் நாய்

அ) கத்தும் ஆ) உறுமும் இ) குரைக்கும் ஈ) கதறும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தமிழ் நாட்டிற்கு கரும்பைக் கொண்டு வந்து பயிரிட்ட மன்னன்

அ) இராவணன் ஆ) அதியர்மான்
இ) எல்லாளன் ஈ) சேரன்செங்குட்டுவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இருபத்தைந்து ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விழா

அ) வெள்ளிவிழா ஆ) பொன்விழா இ) வைரவிழா ஈ) பவளவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று

அ) புறநானூறு ஆ) திருக்குறள்

இ) தொல்காப்பியம் ஈ) வளையாபதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. கதிரவன் காலிக்கும் திக்கு

அ) வடக்கு ஆ) கிழக்கு இ) தெற்கு ஈ) மேற்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பண்டைத்தமிழ் மன்னர்கள் பகைநாட்டின் மீது போர் தொடங்குவதற்கு முன்பு கூட மாந்தநேயத்தைப் போற்றிப் பேணி வந்துள்ளனர். போர் தொடங்குவதற்கு முதல் பகை நாட்டிலுள்ள பல்வேறு மக்களுக்கும் போர் தொடங்கும் செய்திகளை பறை அறைந்து அறிவிப்பர். ஆநிரைகளும் ஆசிரியர் அந்தணர் போன்ற சான்றோர்களும் தங்கள் குடிவழிக்கு இன்னும் மக்களைப் பெறா இணையரும் போரோடு தொடர்பில்லாத அனைத்து மக்களும் காப்பரண்கள் தேடிச் சென்றுவிடுங்கள்! போரோடு தொடர்புடையாரும் படைவீரர்களுமே எம்மால் தாக்கப்படுவர். கடும்போர் தொடங்கவுள்ளோம்! என்று பகைநாட்டு மக்கள் துன்புறாமல் போர் செய்தனர். ஆனால், இன்றோ எங்கோ இருந்து கொண்டு ஒரு ஆழியை அழுத்தி எதிரியின் போர்க்களத்தில் ஒரு புல்பூண்டு கூட மிஞ்சாமல் அழித்துவிடக் கூடிய ஆயுதங்கள் பெருகிவிட்டன. கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து தாக்கும் ஆயுதங்கள். மூச்சோடு உள்நுழைந்து ஆளை எரிக்கும் நச்சுவளிக் குண்டுகள், கொத்தணிக் குண்டுகள் என்று எத்தனையோ கொலைக் கருவிகள் மக்களைக் கொன்று குவிக்கின்றன. அதிலும் சிங்கள அரசானது அரண்வலயம் என்று ஒரு சிறுநிலப் பகுதியை ஒதுக்கி, போர்முனையை விட்டு அந்த வலயத்துள் வாருங்கள்! உங்களைக் காப்போம் என்று குவியச் செய்து விட்டு, கொத்தணிக் குண்டுகளையும் எரிகுண்டுகளையும் வீசி ஆயிரமாயிரம் தமிழரைக் கொன்று குவித்துள்ளது. ஆயிரமாயிரம் மக்களை உறுப்பிழந்தோர் ஆக்கியுள்ளது. என்னே! சிங்களத்தின் மாந்தநேயமும் அதைப் பார்த்தும் பாராதது போல் இருக்கும் உலகின் மாந்தநேயமும்

1. மாந்தநேயத்தைப் போற்றி பேணி வந்தோர் யாவர்?

   ______________________________

2. தமிழ் மன்னரால் கடைப்பிடிக்கப்படும் மாந்தநேயப் போர்முறைகள் எவை?

   ______________________________

   ______________________________

3. இன்று உலகில் எவ்வாறான போர் முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன?

   ______________________________

   ______________________________

4. மாந்தநேயம் என்றால் என்ன?

   ______________________________

   ______________________________

5. சிங்களம் எத்தகைய போர்முறையைக் கடைப்பிடித்தது?

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினாக்கள், ஏழில் ஐந்திற்கு முழுவிடை தருக.

1. முத்தமிழ் என்றால் என்ன? விளக்குக.

2. பண்டாரவன்னியனுக்கு உரிய வரலாற்றுச் சிறப்பு என்ன?

3. காட்டுமல்லிகை ஏன் வீட்டு எல்லைகளுக்குள் காணப்படுவதில்லை?

4. தைப்பொங்கலின் வேறுபெயர்களைத் தருக.

5. குறளுக்குப் பொருள் தருக.

முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு

6. தென் திசையைப் பார்க்க கனகசுப்பிரத்தினத்திற்கு ஏன் சிந்தையும் தோளும் பூரிக்கின்றன?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

7. பாரதி வாழ்ந்த காலத்துத் தமிழ்ப்பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

(புள்ளிகள் 10)

## 4) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!
பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா!

சிந்திய கண்ணீர் துடைப்பவரார் - பயம்
சிந்தை அகன்றிடச் செய்பவரார்?
முந்து கவலை மறந்திடவே - ஒரு
முத்தம் அளிக்க வருபவரார்?

உள்ளம் தளர்வுறும் நேரத்திலே - உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவரார்?
அள்ளி எடுத்து மடியிருத்தி - மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவரார்?

1. யாருடைய கைநலம் பார்த்து அறங்கள் வளரும்?

2. பெண்கள் சிந்தையிலிருந்து எதை அகன்றிடச் செய்வார்?

3. எதற்கு மாதவம் செய்தல் வேண்டும்?

4. பெண்கள் எவ்வாறு அன்பைப் பெருக்கி வளர்ப்பர்?

5. உயிர் ஊட்டும் உரைகள் என்றால் என்ன?

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. இடைச்சொல் வகைகளைத் தந்து அவற்றுள் ஒன்றை விளக்குக.

2. எச்சவினை என்றால் என்ன? விளக்குக.

3. மாறுபடு புணர்ச்சி மூன்றையும் எடுத்துக்காட்டுடன் தருக.

4. பின்வரும் சொற்றொடர்கள் இடம்பெறச் சொல்லியங்கள் அமைக்குக.

   ஏட்டுச் சுரைக்காய்

   சுற்றுமுற்றும்

   ஆடிப்பாடி

5. சொற்களுக்குப் பொருள் தருக.

   உடுக்கை

   கேளிர்

   மாட்சி

   மகவு

   ககனம்

   பொய்யற்க

(புள்ளிகள் 15)

6) இப்பந்தியைத் தமிழ்மொழிக்கு மாற்றுக.

A king and a poet are good friends. But they had never met each other. The king wanted to meet the poet when he was about to die. The king was awaiting the poet to see him. The poet too became more eager to meet the king and went to the capital. But before the poet arrived, the king was passed away. When the poet heard the news, he immediately passed away. Both of them became good examples for a good friendship.

En konge og en poet var gode venner. Men de hadde aldri truffet hverandre. Kongen som var dødende ønsket å møte poeten. Han ventet på å møte poeten. Poeten ble også mer og mer ivrig om å møte kongen, så han reiste til hovedstaden. Men før han nådde frem poeten var kongen død. Da poeten fikk høre dette, døde han selv. De begge ble et forbilde for gode venner.

Ein König und ein Dichter waren sehr gute Freunde. Aber sie haben sich noch nie gesehen. Als der König im Sterben lag, wollte er den Dichter sehen. Der König wartete darauf, dass der Dichter ihn besuchte. Mit der Freude den König endlich zu sehen begab der Dichter sich zur Hauptstadt. Jedoch verstarb der König bevor der Dichter angekommen war. Sobald der Dichter diese Nachricht hörte, verstarb er auch. Die beiden wurden ein gutes Beispiel für eine tolle Freundschaft.

Un roi et un poète était de grand amis, mais ils ne se sont jamais vu auparavant. Le roi était sur le point de mourir, donc il a voulu rencontrer ce poète. Il l'attendait avec impatience. Le poète était ému par l'appel du roi et rejoint la capitale pour le voir. Le roi mourra avant l'arrivée du poète. Le poète a entendu la nouvelle, et moura sur place. Tout deux sont un exemple pour une bonne amitié.

(புள்ளிகள் 05)

En konge og en poet var gode venner. Men de havde aldrig direkte set hinanden. Da kongen skulle til at dø, ønskede han at se poeten. Han ventede på at poeten skulle komme og se ham. Da poeten også var ivrig i at se kongen, tog han til hovedstaden. Men inden han kom, var kongen død. Idet poeten hørte denne besked døde han. Begge blev de et godt eksempel på et godt venskab.

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.**

1. **காட்டுமல்லிகையும் உருத்திரமூர்த்தியும்.**

2. **தைப்பொங்கல் பாடநூலில் உள்ளபடி.**

3. **வன்னி மக்களின் இன்றைய நிலை.**

4. **நான் பார்த்துச் சுவைத்த திரைப்படம்.**

(புள்ளிகள் 20)